## காசநோய் மருத்துவமனையில் பரிசோதனை

ஹெச்.ஐ.வி. பரிசோதனையைப் பற்றி விசேஷ பயிற்சி பெற்ற காசநோய் மருத்துவர் அல்லது செவிலியரிடம் கேட்கலாம். உங்களைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் இரகசியமாக வைத்துக் கொள்ளப்படும். காசநோய் மருத்துவமனையில் பரிசோதனை செய்துக் கொண்டால் மருத்துவமனைக் குறிப்பில் அதன் முடிவு பதிந்து வைக்கப்படும். அதன் பிறகு உங்கள் உடல் நலம் சம்பந்தமாக இருக்கும் மருத்துவரோ செவிலியரோ இதனைப் படிப்பார்கள். வேறு யாருக்கும் இது காண்பிக்கப்படாது.

## உங்கள் உள்ளூரில் உள்ள ஜெனிட்டோ-யூரினரி மெடிசின் (ஜி.யூ.எம்) மருத்துவமனையில் பரிசோதனை

(மேலும் விவரங்களுக்கு உங்களுடைய் டி.பி. செவிலியரை அணுகுங்கள்)

- சில மருத்துவமனைகளில் நீங்கள் மருத்துவரைக் காண்பதற்குக் காத்திருக்கலாம்@ சில மருத்துவமனைகளில் மருத்துவரைக் காண்பதற்கு முன் நீங்கள் அனுமதி பெற வேண்டியிருக்கலாம்
- வேறு மருத்துவரிடம் இருந்து கடிதம் பெற்று வர வேண்டும் என்கிற அவசியம் இல்லை
- இத்தகைய மருத்துவமனைகள் இரகசியம் சம்பந்தமான சட்டங்களைக் கடைப்பிடிக்கின்றன
- உங்களைப் பற்றிய விவரங்கள் எதுவும் வெளியே செல்லாது. அங்கு வேலைப் பார்ப்பவர்கள் மட்டும் தான் அதனை படிக்க முடியும்
- உங்களது ஜி.பி.க்கு (பொது மருத்துவர்) இந்த முடிவுகள் வெளியிடப்படாது
- உங்களது உண்மையான பெயரையோ, பிறந்த தினம் அல்லது முகவரியையோ கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நீங்கள் கொடுக்கும் உங்களைப் பற்றிய தகவல்களை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்
- நீங்கள் வேறு மருத்துவமனையில் பரிசோதித்துக் கொள்ள விரும்பினால் தேசிய எய்ட்ஸ் உதவி இலவச எண்ணைத் தொடர்புக் கொள்ளுங்கள். 0800 567 123
- உங்களது ஜி.பி.யிடமும் பரிசோதித்துக் கொள்ளலாம்
- எனினும் நீங்கள் நஷ்ட ஈடு கோரினால், பாசிடிவ் ஹெச்.ஐ.வி பரிசோதனையைப் பற்றியத் தகவல்களை ஆயுள் அல்லது உடல்நலக் காப்பீட்டு நிறுவனங்களுக்கு உங்களுடைய ஜி.பி தெரியப்படுத்திவிடலாம். இதைப் பற்றிய கவலைகள் உங்களுக்கு இருந்தால், ஜி.யூ.எம். மருத்துவமனையில் பரிசோதனை செய்துகொள்வது மிகவும் சிறந்ததாகும்

காசநோய் வராமல் உங்கள் குடும்பத்திற்கும் நண்பர்களுக்கும் பாதுகாப்பு அளியுங்கள் - உங்களுக்கான டி.பி. மருந்துகளைத் தவறாமல் எடுத்துக் கொள்ளுங்கள்

## பரிசோதனை சம்பந்தமான தகவல்களைப் பெறுவதற்கு மற்ற தகவல் மையங்கள்

**தேசிய எய்ட்ஸ் உதவி அழைப்பு** (NAH)
0800 567 123

**ஆப்பிரிக்க எய்ட்ஸ் உதவி அழைப்பு**
0800 0967 500 (இணையதளம்: www.africaninengland.org)

**டெரென்ஸ் ஹிகின்ஸ் டிரஸ்ட் உதவி அழைப்பு**
0845 12 21 200 (இணையதளம்: www.tht.org.uk)

**ஜிலாலீ•ஹீ டினஹிஇஞ ணிஸிடி நிவீ**
020 7713 0222 (இணையதளம்: www.positivelywomen.org.uk)

**ப்ளாக்லைனர்ஸ் உதவி அழைப்பு**
020 7738 5274

**மெயின்லைனர்ஸ் உதவி அழைப்பு**
020 7582 5434 (இணையதளம்: www.mainliners.org.uk)

**TB Alert** என்பது காசநோய் பற்றி உலகளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் யூ.கே.வில் உள்ள தொண்டு நிறுவனம். யூ.கே.விலும் வளர்ந்து வரும் நாடுகளிலும் நோயாளிகள் சரியான தகவல்களும் சிகிச்சையும் பெற வேண்டும் என்பதற்கான செயல்திட்டங்களுக்கு நாங்கள் ஆதரவு அளிக்கிறோம். உங்கள் ஆதரவுடன் காசநோய் பற்றிய விழி ப்புணர்வை உலகம் முழுவதும் உண்டாக்கி நிறைய உயிர்களை எங்களால் காப்பாற்ற முடியும்.

**TB Alert**,
Community Base,
113 Queens Road,
Brighton BN1 3XG
தொலைபேசி: 01273 234030

மேலும் விவரங்களுக்கு அல்லது இந்த பிரசுரத்தின் பிரதிகளைப் பெறுவதற்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 770 (அலுவலக நேரத்தில் மட்டும்).

டி.பி.அலெர்ட்டிற்கு நன்கொடை வழங்க அல்லது தொண்டு செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண் 01273 234 784 (அலுவலக நேரத்தில் மட்டும்).

அல்லது www.tbalert.org என்கிற இணையதளத்தைப் பாருங்கள

இந்தப் பிரசுரத்தில் காசநோய் மற்றும் ஹெச்.ஐ.வி. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமாகக் கொடுக்கப்பட்டுள்ளத் தகவல்கள் உங்களுக்கு இவற்றைப் பற்றிய பொதுவான தகவல்களை அளித்திடும். நோயாளிகளின் நலனில் அக்கறைக் கொண்டுள்ள மருத்துவர்கள், மருந்தாளுநர்கள், மற்றும்/அல்லது மற்ற உடல்நல பராமரிப்பு நிபுணர்களின் அறிவு, நிபுணத்துவம், திறமை ஆகியவற்றை இது ஈடு செய்யாது. பரிசோதனை மற்றும் சிகிச்சை சம்பந்தமான சந்தேகங்களை உடல் நல பாதுகாப்பு நிபுணர்களிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்.

இது வட மேற்கு லண்டன் டி.பி. நெட்வொர்க்கால் செய்யப்பட்டது.

இது இங்கிலாந்தில் பதிவு செய்யப்பட்ட, உத்திரவாதங்கள் மட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிறுவனம் இதன் பதிவு எண். 3606528 பதிவு தருமஸ்தாபன எண். 1071886 வடிவமைப்பு: வொர்க்சாங், லண்டன் 020 8352 8300

# காசநோய் (டி.பி.) உள்ளவர்களுக்கு ஒரு முக்கிய பரிசோதனை



## காசநோய் ஏற்படுவதற்கு ஹெச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸ் எவ்விதத்தில் காரணமாக உள்ளது?

யூ.கே.வில் காசநோயினால் பாதிக்கப்பட்டவர்கள் ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்படவில்லை. ஆயினும் சில நாடுகளில் ஹெச்.ஐ.வி./எய்ட்ஸ் மற்றும் காசநோய் ஆகியவை சேர்ந்தே இருக்கின்றன. ஹெச்.ஐ.வி., உடலின் எதிர்ப்பு சக்தியை பாதிக்கிறது, எனவே காசநோய் சுலபமாக வருகிறது.

காசநோயும் ஹெச்.ஐ.வி.யும் பரவலாக இருக்கும் நாடுகளில் வசிப்பவர்களை காசநோய் அதிகளவில் பாதிக்கிறது. எனவே இந்த இரு நோய்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது - ஒரு நோயினால் பாதிக்கப்பட்டவர்களை மற்றொன்று எளிதாக பாதிக்கிறது.

## ஹெச்.ஐ.வி./எய்ட்ஸ் என்றால் என்ன?

- ஹியூமன் இம்யூனோடெஃபிஸியன்ஸி வைரஸ் என்பதன் சுருக்கமே ஹெச்.ஐ.வி. அக்யூர்ட் இம்யூன் டெஃபிஸியன்ஸி சிண்ட்ரோம் என்பதன் சுருக்கமே எய்ட்ஸ்.
- நோய்கள், முக்கியமாக தொற்றுநோய்கள் உடலில் வராமல் தடுக்கும் எதிர்ப்பு சக்தியை ஹெச்.ஐ.வி. பாதிக்கிறது.
- ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டதுடன் வேறு சில குறிப்பிட்ட நோய்கள் ஏற்பட்டால் அந்த நபருக்கு எய்ட்ஸ் இருக்கிறது.

## ஹெச்.ஐ.வி. எவ்வளவு பரவலானது?

ஹெச்.ஐ.வி. உலகம் முழுவதும் பரவியுள்ளது. ஆனால் சஹாரன் ஆப்பிரிக்கா, தெற்கு ஆசியா மற்றும் கிழக்கு ஐரோப்பா போன்ற இடங்களில் ஹெச்.ஐ.வி. பரவலாக உள்ளது.

யூ.கே. வில் 30,000 மக்களுக்கு மேல் ஹெச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்டுள்ளதாக கணக்கிடப்பட்டுள்ளது. இந்த எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் முதல் முறை செய்யப்படும் பரிசோதனையிலேயே 6,500 பேருக்கு மேல் ஹெச்.ஐ.வி. இருப்பது தெரியவருகிறது. ஆண் பெண் உடலுறவு தான் உலகளவில் ஹெச்.ஐ.வி. பரவுவதற்கு முக்கிய காரணம். ஆயினும், ஆண்களுடன் உடலுறவு வைத்துக் கொள்ளும் ஆண்களுக்கும் அதிகளவில் ஹெச்.ஐ.வி. பரவுகிறது.

## ஹெச்.ஐ.வி. மற்றும் எய்ட்ஸினை குணப்படுத்த முடியுமா?

ஹெச்.ஐ.வி. நோய் எதிர்ப்பு மருந்துகளால் ஹெச்.ஐ.வி.யினால் ஏற்படும் பாதிப்புகளைக் கட்டுப்படுத்த முடியும். இப்போது ஹெச்.ஐ.வி.யையோ எய்ட்ஸையோ குணப்படுத்த முடியாது. ஆயினும், ஹெச்.ஐ.வி. நோய் எதிர்ப்பு மருந்துகளை உட்கொள்ளும் அநேக மக்கள் நீண்ட நாட்கள் நல்ல முறையில் வாழ முடியும் என்று ஆராய்ச்சிகள் கூறுகின்றன. நீங்கள் ஹெச்.ஐ.வி. பாசிட்டிவ் என்று உங்களுக்குத் தெரியவந்தால் மற்றவர்களுக்கு ஹெச்.ஐ.வி. பரவாமல் பாதுகாப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுங்கள்.

## ஹெச்.ஐ.வி. எவ்வாறு பரவுகிறது?

- ஆணுறை இல்லாமல் தவறான உடலுறவு கொள்வதனால் ஹெச்.ஐ.வி. பரவுகிறது.
- கர்ப்பமாய் இருக்கும் தாய் மூலமாக குழந்தைக்குப் பரவுகிறது. குழந்தை பிறக்கும் போதோ தாய்ப்பால் அருந்தும் போதோ குழந்தையும் ஹெச்.ஐ.வி.யினால் பாதிக்கப்படுகிறது.
- ஊசிகள், சிரஞ்சிகள் அல்லது மருந்து ஏற்றும் ஏதேனும் கருவிகள் மூலம் பரவுகிறது.
- பரிசோதிக்கப்படாத இரத்தம் அல்லது வேறு ஏதேனும் உறுப்புகளை மாற்றுவது மூலமாகவும் பரவுகிறது.

## ஹெச்.ஐ.வி. பரிசோதனை

### இந்தப் பரிசோதனையில் என்ன செய்யப்படும்?

குறைந்த அளவு மாதிரி இரத்தம் கைகளிலிருந்து எடுக்கப்படும். அது ஆய்வு கூடத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டு பரிசோதிக்கப்படும்.
நீங்கள் ஏற்கனவே மருத்துவமனையில் இரத்த பரிசோதனையை செய்து முடித்திருப்பீர்கள், ஆனாலும் நாங்கள் இப்பொழுது உங்களுடைய ஒப்புதல் மற்றும் அனுமதியுடன் ஹெச்.ஐ.வி பரிசோதனை மட்டும் செய்யப் போகிறோம். அனைத்து ஹெச்.ஐ.வி பரிசோதனைகளும் இலவசமானவை.

## பரிசோதனை முடிவைப் பெறுவதற்கு எத்தனை நாட்களாகும்?

பரிசோதனை முடிவினைப் பெறுவதற்கு 3 நாட்கள் ஆகும். முடிவு என்னவாக இருந்தாலும் மருத்துவர் உங்களிடம் தனியாக பரிசோதனை முடிவைக் கொடுப்பார். இந்த முடிவினை தொலைபேசி மூலமாகக் கொடுக்க கூடாது. முடிவு பிரதிகளும் நோயாளிகளிடம் கொடுக்கப்படாது,

## முடிவு எனக்கு என்ன சொல்கிறது?

**ஹெச்.ஐ.வி. நெகட்டிவ்**
பரிசோதனை நடப்பதற்கு முன்னர் உள்ள 3 மாதங்களில் நீங்கள் ஹெச்.ஐ.வி வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடாதவரையில் உங்களுக்கு ஹெச்.ஐ.வி. இல்லை என்று அர்த்தம். கடைசி 3 மாதங்களில் நீங்கள் ஹெச்.ஐ.வி வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் இந்த பரிசோதனையால் உங்களுக்கு ஹெச்.ஐ.வி. இருப்பதைக் கண்டுபிடிக்க முடியாது (இதுதான் விண்டோ' பீரியட்). ஹெச்.ஐ.வி. வருவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தால் நீங்கள் அந்த தினத்திலிருந்து மூன்று மாதங்கள் கழித்து மற்றொரு பரிசோதனையை செய்துக் கொள்வது நல்லது. "

**ஹெச்.ஐ.வி. பாசிட்டிவ்**
உங்களுக்கு ஹெச்.ஐ.வி. இருக்கிறது. இரண்டாவது ஹெச்.ஐ.வி பரிசோதனை செய்யப்பட்டு இந்த முடிவு சரிபார்க்கப்படும் (இதில் தவறுகள் ஏற்படுவது மிகமிக அரிது). ஹெச்.ஐ.வி/எய்ட்ஸ் நிபுணருடன் இரகசிய சந்திப்பு உங்களுக்கு ஏற்பாடு செய்யப்படும். அவர் மற்ற தேவையான பரிசோதனைகளுக்கும் சிகிச்சைக்கும் ஏற்பாடு செய்வார்.

## பரிசோதனை முடிவு யாருக்குத் தெரியப்படுத்தப்படும்?

பரிசோதனை முடிவு உங்களுக்கும் உங்களுக்கு மருத்துவ பாதுகாப்பு அளிப்பவருக்கு மட்டும் தான் தெரியும். உங்கள் அனுமதி இல்லாமல் வேறு யாருக்கும் இந்த பரிசோதனை முடிவுத் தெரியப்படுத்தப்படாது. உங்கள் வாழ்க்கைத் துணைக்கோ, குடும்பத்தினர் அல்லது நண்பர்களுக்கோ, உங்கள் சக ஊழியர்களுக்கோ, நில உரிமையாளருக்கோ, அரசுக்கோ, வீடு, அலுவலகம் அல்லது குடியேற்ற சேவை நிறுவனத்திற்கோ தெரியப்படுத்தப்படாது.

## ஹெச்.ஐ.வி. பரிசோதனை செய்வதற்கும் பரிசோதனைப் பற்றித் தெரிந்துக் கொள்வதற்கும் நான் எங்குச் சென்று யாரை அணுக வேண்டும்?

காசநோய் மருத்துவமனையில் பரிசோதனை செய்துக் கொள்ளலாம். பரிசோதனை செய்வதற்கும் பரிசோதனை சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்த்துக் கொள்வதற்கும் வேறு இடங்களும் உள்ளன.